[5th August 1966

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு நிலம் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. முதலில் சொன்னபடி மூன்று வருஷத்திற்குக் குத்தகைக்கு விடுகிறார்கள். நன்றாக விவசாயம் செய்தால் மேலும் இரண்டு வருஷத்திற்கு விடுகிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தில் குத்தகைக்கு சாகுபடி செய்யக் கூடியவர்கள் அப்புறப்படுத்தப்படக் கூடாது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்த நிலத்தைக் குத்தகைக்கு விடுகிற வரையில் அந்த சாகுபடி விவசாயிகளை வருடாவருடம் புதுப்பித்து அவர்களை அப்புறப்படுத்தாமல், அவர்கள் தவறு செய்யாத வரையில் அந்த இடத்திலேயே தொடர்ந்து அவர்களை சாகுபடிக்கு விட்டு வைக்க—ரெயில்வே நிர்வாகத்திற்கு இப்போது எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை—அரசாங்கம் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவிடுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : முதலில் பார்க்கிறார்கள், மூன்று ஆண்டுகளுக்கு விடுகிறார்கள். அப்போது நன்றாக வேலை செய்கிறார்களா இல்லையா என்பது தெரியும். நன்றாக வேலை செய்தால் அவர்களுக்குத்தான் அநேகமாக உதவி செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு ஷரத்து, வருடம் ஒன்றுக்கு ஏலத்தில் விடவேண்டுமென்று இருக்கிறது. ஏலத்தில் விட்டால் இவர்கள் போய் எடுப்பது சாத்தியமல்ல. அதிகமாகக் கொடுக்கிறேன் என்று போட்டி ஏற்பட்டால் சாகுபடி விவசாயி நிலத்தை இழக்கும் சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. லால்குடி தாலுகாவில் ரெயில்வே ஓரமாக உள்ள பகுதியை எடுத்து பின் அதிகாரிகளிடம் சொல்லித் தடுத்து வைத்து இப்படித் தகராறு ஏற்படுகிறது. மாநிலம் பூராவும் இந்தப் பிரச்னை ஏற்படுகிறது. உழவர்களின் கோரிக்கை நியாயமானது. இதைப் பரிசீலனை செய்து அரசாங்கம் ஜில்லா அதிகாரிகளுக்கு யோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் எழுந்தார்.

MR. SPEAKER : It is only a request and not a question.

நீங்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறார், அதைப் பரிசீலனை செய்யுங்கள், அவ்வளவுதான்.

ரெங்காராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம்

*113 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ரெங்காராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தார் தாங்கள் விலை பேசிய நிலம் மாநில வீட்டுவசதி போர்டால் ஆர்ஜிதம் செய்யப்படுவதை ஆட்சேபித்து 1961-ல் விண்ணப்பம் செய்துகொண்டனரா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

5th August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) ரெங்கராஜபுரம் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் 18—12—1961 தேதியிட்ட அதன் கடிதத்தில் கண்டுள்ளபடி கோடம்பாக்கத்தில் சங்கம் வாங்குவதற்காக விலை பேசிய 53/1, 54/2, 84, 85/1, 85/2 சர்வே எண் நிலங்களை மாநில வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்வதினின்றும் நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இந்த வேண்டுகோளை மாநில வீட்டு வசதி போர்டின் தலைவர் நகர அமைப்புத் துறை இணை நெறியாளருடன் கலந்து ஆலோசித்தார். கோடம்பாக்கம்-புதூர் (பாகம்-2) வீட்டு வசதித் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்படுவதினின்றும் இந்த நிலங்களுக்கு விலக்கு அளிக்க முடியாதென்றும், நிலம் வழங்குவது குறித்த விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிப்பு வெளியிடப் படும்போது அப்பகுதியில் மேம்படுத்தப்பட்ட மனைகளை வழங்கு மாறு வேண்டி சங்கம் மாநில வீட்டுவசதி வாரியத்தின் தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமென்றும், சங்கத்திற்கு மாநில வீட்டு வசதி போர்டு தலைவர் தெரிவித்துள்ளார். சங்கத்திடமிருந்து இது குறித்து விண்ணப்பம் வந்தால் அதனை மாநில வீட்டு வசதி போர்டு முறைப்படி ஆலோசிக்கும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தார் தாங்கள் விலை பேசி அட்வான்ஸ் கொடுத்த நிலத்தை வீட்டுவசதி போர்டார் கேட்பது சரியல்ல என்று சர்க்காருக்கு விண்ணப்பித்து ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் அவர்களுக்குப் பதில் கொடுக்கவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள், விண்ணப்பித்துக் கொண்டால் பரிசீலிக்கப் படும் என்று கூறுகிறார். இதில் எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிறார்கள். என்ன விண்ணப்பித்தார்கள் என்று சொன்னால்—ஹௌசிங் போர்டிலிருந்து வீடுகள் கட்டும்போது அதில் ஸைட்ஸ் வேண்டு மென்று கேட்டால் அது சம்பந்தமாக உதவி செய்யலாம் என்பது தான்.

விவசாய நிலங்களை வீடுகட்டு மனைகளாக்கத் தடை

***114 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சென்னை மாநகரிலும் மற்றும் பெரிய முனிசிபல் நகரங்களைச் சுற்றியுமுள்ள விவசாய நிலங்கள், வீட்டு மனைகளாக்கப்பட்டு விற்கப்படுவதைத் தடை செய்யும் வகையில் அரசாங்கம் எடுத்திருக்கிற நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. பூ. கக்கன் : தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறை 1964 ஏப்ரல் 3-ம் தேதியன்று வெளியிட்ட 1949-ம் எண் அரசாங்க ஆணையில், வீடு கட்டுவதற்காகவும், வேளாண்மை